Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.10**

Defence

Court

| | |
|---|---|
| Name | பூவராகவன் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 14th day of October 2025.**

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல்விசாரணை**:

நான் தற்போது மந்தராக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ஆம் காடாம்புலியூர் காவல் நிலைய உதவியாளராக பணிபுரிந்தேன். அப்போது 18.09.2021 ஆம் தேதி 21.30 மணிக்கு நான் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது முத்தரசன்குப்பம் கிருஷ்ணசாமி மகன் முருகன் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி அவருடைய அண்ணன் மகன் ஜெகதீசன் என்பவர் புதுப்பாளையம் ஊரில் அவரது வீட்டில் கொலையுண்டு கிடப்பதாக புகார் ஒன்று அளித்தார். அந்த புகாரினை பெற்று காடாம்புலியூர் காவல் நிலைய குற்ற எண்.591/2021 பிரிவு 302 ப்படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலம் கனம் பண்ருட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 14 ஆகும்.** முதல் தகவல் அறிக்கையினை புலன் விசாரணைக்காக அப்போது காவல் நிலையத்தில் பொறுப்பு ஆய்வாளராக இருந்த பயிற்சி துணை கண்காணிப்பாளர் திரு. சத்தியராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்தேன்.

**2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**:

சம்பவயிடத்திற்கு காடாம்புலியூர் காவல் நிலையத்திற்கும் இடையே 10 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். முதல் தகவல் அறிக்கையில் 6 கிலோ மீட்டர் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். காடாம்புலியூர் காவல் நிலையத்திற்கும் பண்ருட்டி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். 18.09.2021 இரவு 9.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அன்றையதினமே நீதித்துறை

நடுவரிடம் முதல் தகவல் அறிக்கையை நான் தாக்கல் செய்து விட்டேன். 5 கிலோ மீட்டர் செல்லுவதற்கு வாகனத்தில் சென்றால் 15 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். காவலர் 438 திரு. கார்த்திகேயன் மூலமாக அனுப்பி வைத்தேன். அவர் இருசக்கர வாகனத்தில் தான் சென்றார் என்றால் சரிதான், அன்று சனிக்கிழமை ஆகும். துரித முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் குடியிருப்பில் சென்று கொடுக்கலாம் என்றால் சரிதான். மறுநாள் ஞாயிற்றுகிழமை விடுமுறை அன்று முதல் தகவல் அறிக்கை மதியம் 12.25 மணிக்கு நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த தாமதத்திற்கு என்ன காரணம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து பிரேதம் எப்படி எப்போது எடுத்து செல்லப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாதி புகாரை எழுதி கொண்டு வந்தார். புகாரில் வாதி அ.சா.1 முருகன் தனக்கும் இறந்த ஜெகதீசனின் தந்தைக்கும் எந்த தொடர்பும் இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 18.09.2021 மதியம் 5.30 மணிக்கு இறப்பு குறித்த தகவல் எங்கள் காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் இல்லை. பாராவசம் காவல் நிலையத்தை ஒப்படைத்து விட்டு ரோந்து பணிக்கு சென்று விட்டேன். அப்போது பயிற்சி துணை கண்காணிப்பாளரும் காவல் நிலையத்தில் இல்லை. அன்று இரவு 10.30 மணிக்கு பயிற்சி துணை கண்காணிப்பாளர் நிலையம் வந்து வழக்கை பெற்றுக்கொண்டு விசாரிக்க தொடங்கினார். அப்போது இருந்த பாரா காவலர் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகாரில் 2 வது எதிரி கோவிந்தராசு முதல் எதிரி நதியா குடியிருந்த வீட்டிற்கு 18.09.2021 காலை வந்ததாகவும் 2 அல்லது 3 மணி நேரங்கள் அங்கே

இருந்து விட்டு அதன் பிறகு சென்றதாகவும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன தேதியில் மாலை 5.30 க்கு தகவல் கிடைத்து 6.00 மணியளவில் நானும், பயிற்சி துணை கண்காணிப்பாளரும் சம்பவயிடத்திற்கு வந்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வந்த பிறகு தான் பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலமாக சடலக்கூராய்விற்கு அனுப்பினோம் என்றால் சரியல்ல. அ.சா. 1 முருகன் அந்த சமயத்திலேயே எங்களிடம் புகார் கொடுத்து விட்டார் என்றாலும் அந்த புகார் எங்களுக்கு சாதகமாக இல்லாத காரணத்தினால் பின்னிட்டு நாங்கள் கூறியது போல் அதசாஆ 1 புகார் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ 1 புகாரில் அ.சா. 1 முருகனிடம் கையொப்பம் மட்டும் வாங்கிக்கொண்டு பிறகு அதனை நிரப்பிய காரணத்தினால் தான் புகாரில் உள்ள விவரங்களுக்கும் கையொப்பத்திற்கும் இடையே இடைவெளி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரை பின்னிட்டு தயார் செய்த காரணத்தினால் தான் நீதித்துறை நடுவருக்கு கால தாமதமாக புகார் அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**1 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொண்டதாக கற்றந்த வழக்கறிஞர் கூறினார்.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*